முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

**மதுரைக் காண்டத்தில் இசைக்கருவிகளும், வழிபாடும் - ஒருபார்வை**

**முனைவர் தி. சுமதி,**

**உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,**

**பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, குரும்பலூர், பெரம்பலூர்.**

சமயங்கள் யாவும் மனிதனை நல்வழிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். ‘சமைத்தல்’ எனும் சொல்லிலிருந்து ‘சமயம்’ என்பது உருவானதாகக் கூறப்படுகிறது. சடங்கு, நம்பிக்கை, வழிபாடு இவைகள் கலந்ததே சமயமாகும். இச்சமயம் எனும் கோட்பாடு எல்லா நாட்டினரிடமும் எப்போதும் நிலவி வரும் ஒரு வாழ்வியல் நெறியெனில் மிகையல்ல. ஆதியில் வாழ்ந்த மனிதன் இயற்கையோடு இயைந்து வாழக் கற்றிருந்தான். அப்போது புயல், மழை, காற்று இவற்றினால் உண்டான அச்சத்தைப் போக்க இயற்கையை வழிபடத் தொடங்கினான். மனிதனுடைய மனமானது தன்னிச்சையாகச் செயல்பட இயலாமல் ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொள்ளும் இயல்பினைக் கொண்டதாகும்.

SAMPLE

வழிபடு என்பதிலிருந்து பிறந்த ‘வழிபாடு’ எனும் சொல்லானது வணங்குதல், பூசை செய்தல், நெறிப்படுத்துதல் எனும் பலபொருளைக் குறிக்கும் சொல்லாகும். தெய்வங்களை மகிழ்விப்பதும், இறைவனுடன் இரண்டறக் கலப்பதும் வழிபாட்டின் நோக்கமாகக் கருதப்பட்டது. “மனிதன் தன் ஆற்றல் ஓர் வரம்பிற்குட்பட்டது என்பதை உணர ஆரம்பித்த நிலையில் கடவுட் கோட்பாடு உருவாகியது. தன் அறிவுக்கும், ஆற்றலுக்கும் முறையே புலப்படாத, உட்படாதவற்றின் மீது அச்சத்தின் காரணமாக மனிதன் நம்பிக்கை கொள்ளத் தொடங்கினான். அந்நம்பிக்கையின் அடிப்படையில் அவனிடம் கடவுள் நம்பிக்கை தோன்றியதெனலாம். இயற்கையின் புதிரான செயலை மனிதன் உணர இயலாத நிலையில் அதனை வழிபட்டு அமைதிப்படுத்த முயன்றபோது வழிபாடு உருவாகியது”[1] என்கிறார் முனைவர் காந்தி. மனிதனின் வாழ்க்கை பல்வேறு வகையான பரிமாணங்களைப் பெற்றதைப் போன்று நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய வழிபாடானது இயற்கை வழிபாடு, இறைவழிபாடு, என்று வளர்ந்து வாழ்க்கையில் பிரித்துப் பார்க்க இயலாத ஒரு கூறாகத் தொடர்ந்து நிலவி வருகிறது. மேலும், விலங்குகளைப் போன்று திரிந்த மக்கள் மனிதர்களாகச் செயல்பட உறுதுணையாக இருந்தது தெய்வ வழிபாட்டு நம்பிக்கையாகும். “தெய்வ நம்பிக்கைக்கு அடிப்படை பயம். அது மூடநம்பிக்கையாகவும் இருக்கலாம். ஆனால், தெய்வம் உண்டு. அதற்கு

நம்மமைவிட மிகுந்த வல்லமை உண்டு. அதனால் எதையும் செய்ய முடியும்" என்ற எண்ணம் பிறந்த பிறகு தான் மனிதன் நன்மை தீமைகளைப் பகுத்தறியத் தொடங்கினான்"[2] என்கிறார் சாமி.சிதமபரனார்.

பழந்தமிழ் பேரிலக்கணமாகியத் தொல்காப்பியம் தமிழ்நாட்டுத் நிலப்பாகுபாட்டினைக் கூறுகின்றபோது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களையும் இணைத்துக் கூறுகின்றது.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**

**சேயோன் மேய மைவரை உலகமும்**

**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**

**வருணன் மேய பெருமணல் உலகமும்**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"**[3]

என்று ஐவகை நிலங்களையும் அந்நிலங்களில் திகழும் வழிபடு கடவுள்களையும் குறிப்பிட்டுள்ளது. ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் ஒவ்வொருவரும் அந்தந்த நிலங்களுக்கேற்றவாறு கடவுள்களை முறையாக வழிபட்டனர் என்பதையும் அறிய இயலுகிறது. மேலும், தொல்காப்பிய எழுத்ததிகாரத்தில், "அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் / உளவென மொழிப இசையொடு சிவணிய / நரம்பின் மறைய என்மனார் புலவர்" எனும் 33வது நூற்பாவிலுள்ள நரம்பின் மறைய என்பதனை இசைத்தமிழ் நூலாகவும், அந்நூலில் இசைக்கருவிகளைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் சுட்டுகின்றனர் உரையாசிரியர்கள்.

இசை எனப்படுவது ஒழுங்குபடுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட ஒலிகளின் ஒத்திசைவாகும். இசை என்ற சொல்லுக்கு 'இசைய வைப்பது' என்பது பொருள். மனிதனையும், உயிரினங்களையும் இசைய வைக்கின்ற, பணிய வைக்கின்ற சாதனம் இசை. இந்த இசை படித்தவர், பாமரர் என்ற பாகுபாடில்லாமல் பரவியுள்ளது. இசையோடு இறைவனை வழிபடுவதே இன்பமாகும். அதோடு இசையை இணைத்து வழிபடுகின்றபோது, புற சத்தங்களிலிருந்து மனம் விடுபட்டு இறைவனோடு மனம் இணைய இசை பயன்படுகிறது.

தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியமான சிலப்பதிகாரம் சமணக் காப்பியமாக கருதப்படுகிறது. இந்நூல் சங்க காலத்திற்கும், தேவார காலத்திற்கும்



SAMPLE

இடைப்பட்ட காலத்தில் எழுந்ததாகும். இதனை தமிழ் இசையின் முழுமையான ஆதார நூல் எனவும்:, அதன் காலம் கி.பி.5ஆம் நூற்றாண்டு எனவும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டு, அக்காலத்து இசையின் முறை, இசைக்கருவிகள், இலக்கணம் பற்றிய விரிவான விளக்கங்கள் எங்ஙனம் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது என்பதை விரிவாக பதிவு செய்துள்ளார்கள்.

கடவுள் வழிபாட்டின்போது இசைக் கருவிகளிலிருந்து ஒலியெழுப்பி கும்பிடும் வழக்கம் முன்பிருந்தே இருந்ததாக அறிய முடிகிறது. மதுரைக் காண்டத்தில் தெய்வ வழிபாட்டின்போது எத்தகைய இசைக்கருவிகளைப் பயன்படுத்தி இறைவனை வழிபாடு செய்துள்ளனர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வேட்டுவ வரியில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரையை நோக்கி நடந்து செல்லுகின்றபோது தமக்கு உண்டான சோர்வினைப் போக்கும்விதமாக செல்லுகின்ற வழியிலிருந்த ‘ஐயை’ எனும் கோவிலில் இளைப்பாறினார்கள். அவ்விடத்தில் சாலினி எனும் பெண், தன்மீது தெய்வம் இறங்கியதால் ஆவேசமாகக் காட்சியளித்தாள். அப்போது,

**“ஆறுஎறி பறையும் சூறைச்சின்னமும்**

**கோடும் குழலும் பீடுகெழு மணியும்**

**கணம் கொண்டு துவைப்ப அணங்குமுன்நிறீஇ**

**. . .கலைப்பாரி ஊர்தியை கைதொழுது ஏத்தி”**[4]

எனும் இப்பாடலின் வழியாக வழிப்பறியின்போது கொட்டும் பறை, சூறையாடும்போது பயன்படுத்தும் சின்னமான ஊதுகொம்பு, புல்லாங்குழல் மற்றும் மணியோசை ஆகிய இசைக்கருவிகள் அனைத்தையும் ஒருசேர ஒலித்து தெய்வம் ஏறிய சாலினியைச் கொற்றவையாக நினைத்து வழிபட்டனர். அப்போது, சாலினி தன்னால் பயன்பெற்று வெற்றி பெற்றவர்கள் பலி செலுத்திய பீடத்தை வணங்கி பின்னர் கொற்றவையைக் கையால் தொழுது நாவால் போற்றினாள். இதேபோன்று கொற்றவைக்குப் பலி கொடுக்கின்றபோது,

**“துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய**

**வெடிபட வருபவர் எயினர்கள் அரைஇருள்**

**அடுபுலி அனையவர் குமரிநின் அடிதொடு**

SAMPLE

முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

**படுகடன் இதுவுகு பலிமுக மடையே"**[5]

எனப் பாடுகிறார் இளங்கோவடிகள்.

துடி, சிறுபறை, கொம்பு எனும் இசைக்கருவிகளை இசைத்து, பாலை நிலத்தைச் சார்ந்த மறவர், கொற்றவை அடியைத் தொட்டு பெற்ற வெற்றிக்கு விலையாகத் தரும் கடன் என் நிணத்திலிருந்து சிந்தும் இரத்தமாகும், இக்குருதிப் பலியை ஏற்றுக்கொள்வாயாக எனக் கூறி வழிபடுகின்றனர். புறஞ்சேரியிலிருந்த பாணர்கள் துர்க்கையின் போர்க்கோலத்தைப் பாடிக் கொண்டிருந்தபோது கோவலன் செங்கோட்டு யாழிலே தந்திரிகரம் (யாழின் நரம்பு) எனும் உறுப்பினூடே, திவவுகளையும் (நரம்புகளை அழுத்தி இசையை வலிதாக்கும் கோல்) அதன் நிலையிலிருந்து நெகிழாமல் உறுதியாகக் கட்டினான். அந்த யாழில் ஒற்றுறுப்பினில் (தாளத்திற்கென அமைந்த ஒரு உறுப்பு) பற்றுறுப்பினைச் (சுதி,மெட்டு) சேர்த்து உழைகுரலாகவும், நரம்புகளை முறுக்கி, கொற்றவையின் பாடலாகிய பாலைப் பண்ணை, ஆசான் எனும் பண்ணோடு இணைத்துப் பாணர்களுடன் சேர்ந்து பாடி வழிபாடு செய்தான். மேலும், ஊர்காண் காதையில்,

**"வால்வெண் சங்கொடு வகைபெற்று ஓங்கிய**

**காலை முரசம் கனைகுரல் இயம்ப"**[6]

என்று சிவன், திருமால், பலராமன், முருகன் கோவிலிலும் அறவோர் இருப்பிடங்கள் மற்றும் மறத்துறை விளங்கும் மன்னவன் கோவிலிலும் (அரசவை) தூய வெண்சங்கோடு சிறந்த காலை முரசமும் சேர்ந்து ஒலியெழுப்பியது என்று கூறியிருப்பது காலையில் கடவுள் வழிபாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

ஆய்ச்சியர் குரவையில் வெண் கொற்றக்குடையுடைய பாண்டிய மன்னனின் அரசவையில் பள்ளியெழுச்சி முரசம் மிகுந்த ஒலியோடு முழங்கியது. அவ்வொலி கேட்ட மாதரி, தம் மகள் ஐயையிடம் இன்று நெய்கடையும் முறை தனது எனக் கூவி அழைக்கிறாள். அப்போது அங்கு வந்த ஏழு கன்னியரும், ஏழு காளைகளை அடக்கியவனையே மணப்போம் எனக் கருதி வளர்ந்தவர்கள் என்று தன் மகள் ஐயையிடம் மாதரி கூறினாள். அப்பெண்களுக்கு இயற்பெயர் இருப்பினும் அப்பெண்களை வரிசையில் நிற்க வைத்து யாழ் எனும் இசைக் கருவியின் நரம்புகளிலிருந்து வரும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என இசைக் கருவியிலிருந்து வரும் பண்களின் பெயர்களால் பெயர் சூட்டுகிறாள்.

SAMPLE

இப்பெண்கள் மாயவனின் கழுத்திலே துளசி மாலையைச் சூடி, வணங்கி இசைக் கருவிகளை இசைத்து குரவை ஆடுகின்றார்கள்.

தமிழர்களின் இசைக்கருவிகளை இரு முதன்மைக் கூறுகளாகப் பிரிக்கும் வழக்கம் உண்டு. பண்களை இசைப்பவைகளை பண்ணிசைக் கருவிகள் எனவும், தாளத்தை இசைப்பவைகளை தாளக்கருவிகள் எனவும் பிரிக்கின்றனர். மேலும் அவற்றை நரம்புக் கருவி (ஆதி, மகர, சகோடயாழ்), துளைக்கருவி (குழல்), தோற்கருவி (தவில், மிருதங்கம்), கஞ்சகக் கருவி (ஜால்ரா, குழித்தாளம்) எனவும் பிரிக்கின்றனர். இக்கருவிகளில் சில கருவிகளைத் திருவிழாக்களின்போது இறைவனை வழிபடுவதற்கும், இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கும் பற்றுக்கோடாக முழங்கி வழிபாடுகளை நிகழ்த்தும் பாங்கினை நம்முடைய இலக்கியங்கள், இலக்கணங்கள், காப்பியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

### சான்றெண் விளக்கம்

1. முனைவர் க.காந்தி, தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.261.
2. சாமி.சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும், ப.21.
3. இளம்பூரணர் உரை, தொல்.பொருள் - அகத்திணை, நூ.05.
4. செயப்பிரகாசம், ச.சிலப்பதிகார மூலமும் குறிப்புரையும், பா.வ.40-44.
5. பொ.வே.சோமசுந்தரனார், சிலப்பதிகாரம் விளக்க உரை, ப.65.
6. ஜெ.ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம், ப. 287.

### துணைபுரிந்த நூல்கள்

1. 1.சு.வித்தியானந்தன், தமிழர்சால்பு.
2. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள்.
3. க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்
4. சாமி.சிதம்பரனார், பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்
5. க.கைலாசபதி, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்.

SAMPLE